## முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண்.38/2016

வாதி தரப்பு 1வது சாட்சி பரிதாபேகம் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.பரிதாபேகம் | வயது | : | 64/24 |
| கணவர் பெயர் | : | முகமது கனி | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | புதுக்கோட்டை | தொழில் | : | வீட்டு குடித்தனம் |

நாள்-20.02.2024

வா.சா.1

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எனது கணவரின் பெயர் முகமது கனி. எனது கணவர் புதுக்கோட்டை மாவடத்தின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்.

2) பிரதிவாதி என் குடும்பத்தின் நண்பராக இருந்தார். எங்களுக்கு ஆண் குழந்தை இல்லை என்பதால். என் கணவரும் நானும், பிரதிவாதியை எங்களது பையன் போல் பார்த்துவந்தோம்.

3) எனது மூன்றாவது மகளின் பெயர் செர்லின் பெனாஷிர். அவருக்கு 2014ம் வருடம் டிசம்பர் மாதம் திருமணம் நடந்தது.

4) பெனாஷிர்-ன் திருமணத்திற்கு பிரதிவாதி ரூ.60 லட்சம் கொடுத்தார் என்றால் இல்லை.

5) பெனாஷிர்-ன் திருமணத்திற்கு அனைத்து வேலைகளையும் பிரதிவாதிதான் செய்தார் என்றால் இல்லை.

6) 29.01.2015ம் தேதியன்று பிரதிவாதிக்கு ரூ.19,65,000/-த்தை எனது நகைகளை அடகு வைத்து கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த நகைகளை இந்தியன் வங்கியில் அடகு வைத்து, ஐசிஐசிஐ வங்கி காசோலையை பிரதிவாதிக்கு கொடுத்தேன்.

7) இந்தியன் வங்கியில் எத்தனை பவுன் நகை அடகு வைத்தேன் என்று சரியாக தெரியவில்லை. இந்தியன் வங்கியில் அடகு வைத்த அன்றே ஐசிஐசிஐ வங்கி காசோலை கொடுத்தேன்.

மு.மா.நீ,

8) நான் இந்தியன் வங்கியில் நகை அடகு வைத்ததை காட்டும் ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

9) பிரதிவாதிக்கு நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியில் எனது முதல் மகன் செரின் சித்தாரா திருவாரூரில் உள்ள மூராசன்ஸ் என்ற கடையின் உரிமையாளர் நந்தகுமார் என்பவருக்கு ரூ.2 கோடியே 40 லட்சத்திற்கு தனக்கு பாத்தியப்பட்ட வீட்டை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கும் எனது மகளுக்கும் இடையே பேச்சு வார்த்தை இல்லை.

10) எனது வழக்கறிஞர் பெயர் திரு. சொக்கலிங்கம்.

11) பிரதிவாதிக்கு எதிராக நான் தாக்கல் செய்துள்ள காசோலை வழக்கின் வழக்கறிஞரும் திரு. சொக்கலிங்கம் தான் வழக்கறிஞர்.

12) செரின் சித்தாரா, பிரதிவாதியின் மீது ஒரு காசோலை வழக்குகள் தாக்கல் செய்திருந்தார் என்றாலும், அதில் செரின் சித்தாராவிற்காக எனது வழக்கறிஞர் திரு. சொக்கலிங்கம் அவர்கள்தான் ஆஜரானார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

13) நான் பணம் கொடுத்த அன்றே பிரதிவாதி பிராமிசரி நோட் எழுதிகொடுத்தார். அதில் சாட்சிகளாக அசரப் அலி மற்றும் நிஜாம் கையெழுத்து போட்டார்கள். அந்த பிராமிசரி நோட்டை சேக் என்பவர் எழுதினார். பிராமிசரி நோட்டில் உள்ள வாசகங்களை எழுதியது பிரதிவாதிதான்.

14) நந்தகுமார் வாங்கிய கடனுக்கு, பிரதிவாதி என் மூலமாக ஐந்து காசோலைகளை எனது மூத்த மகள் செரின் சித்தாராவிற்கு கொடுத்துள்ளார் என்றால் அது தவறு.

15) சாட்சிகள் அசரப் அலி மற்றும் நிஜாம் ஆகியோர் எனது உறவினர்கள். பிரதிவாதிக்கு அவர்கள் நண்பர்கள். பிராமிசரி நோட்டை எழுதிய சேக் எனது உறவினர் என்றால் சரிதான்.

16) நானும், எனது மூத்த மகள் செரின் சித்தாராவும், நந்தகுமார் என்பவருக்கு பிரதிவாதி மூலமாக பணம் கொடுத்தோம் என்றும், அவர் ஏமாற்றிவிட்டார் என்றும் ஆய்வாளர் கோடிலிங்கத்திடம் நாங்கள் மனு கொடுத்தோம் என்றால் இல்லை.

17) எனது இரண்டாவது மகள் செரின் செரிபா, தனது சகோதரி செரின் சித்தாராவை ஏமாற்றி நந்தகுமார் கிரையம் வாங்கிவிட்டார் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கும் எனது மகளுக்கும் இடையே பேச்சு வார்த்தை இல்லை.

மு.மா.நீ,

18) நான் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள காசோலை வழக்கில் என்னை விசாரித்தார்கள். அதில் என் மகள்கள் கொடுத்த புகார் மனுக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் இல்லை. பிரதிவாதி தரப்பில் அந்த காசோலை வழக்கில் நாங்கள் கொடுத்த புகார் சம்மந்தமான மனுக்களின் நகல்களை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது.

19) இந்த பிராமிசரி நோட்டில் பிரதிவாதி கருப்பு மையினால் கையெழுத்து போட்டுள்ளார் என்றாலும், அதில் உள்ள மற்ற வாசகங்களை ப்ளூ மையினால் எழுதப்பட்டுள்ளது என்றாலும் சரிதான்.

20) நான் கொடுத்த காசோலை மூலமாக பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததை காட்டவும், பிரதிவாதி காசோலையை வங்கியில் தாக்கல் செய்து வசூல் செய்துகொண்டார் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகத்தில் இல்லை.

21) எனது கணவர் 2023ம் வருடம் ஜீன் மாதம் 17ம் தேதி இறந்தார்.

22) எனது கணவர் உயிருடன் இருக்கும்பொழுது பிரதிவாதியின் மீது வழக்கு போடக்கூடாது என்றும், நந்தகுமார் மீதுதான் வழக்கு போட வேண்டும் என்றும் சொன்னார் என்றால் இல்லை.

23) நான் தற்போது ராஜகோபாலபுரம், பெரியார் நகரில், செல்வி அப்பார்ட்மெண்டின் முதல் மாடியில், கதவிலக்கம் எப்-1ல் குடியிருந்து வருகிறேன். அதில் கடந்த இரண்டு வருடங்களாக குடியிருந்து வருகிறேன்.

24) கதவிலக்க எண்.5, சேஷையா சாஸ்திரி ரோடு, ராஜகோபாலபுரம், புதுக்கோட்டையில் உள்ள வீடு எனது மகள் செரின் சித்தாரா பெயரில் இருந்தது.

25) செல்வி அப்பார்ட்மெண்டின் முதல் மாடியில், கதவிலக்கம் எப்-1ல் குடியிருக்க வருவதற்கு முன்பு கதவிலக்கம் 555-ல் எனது நாத்தனார் வீட்டில் ஒரு வருடம் குடியிருந்தோம். அதற்கு முன்பு கதவிலக்க எண்.5, சேஷையா சாஸ்திரி ரோடு, ராஜகோபாலபுரம், புதுக்கோட்டையில் உள்ள வீட்டில் குடியிருந்தோம்.

26) 2020ம் வருடம் வரை நான் கதவிலக்க எண்.5, சேஷையா சாஸ்திரி ரோடு, ராஜகோபாலபுரம், புதுக்கோட்டையில் உள்ள வீட்டில் குடியிருந்து வந்தேன். எனது மகள் செரின் சித்தாரா பெங்களூரில் குடியிருந்து வந்தார்.

27) கதவிலக்க எண்.5, சேஷையா சாஸ்திரி ரோடு, ராஜகோபாலபுரம், புதுக்கோட்டையில் உள்ள வீட்டைதான் எனது மகள் நந்தகுமாருக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது.

மு.மா.நீ,

28) இந்த வீடு விற்ற விபரம் 2020ல் எனக்கு தெரிந்தவுடன் எனக்கும் எனது மகளுக்கும் இடையே பிரச்சினை வந்துவிட்டது. 2020ம் வருடம் தான் எனது மகள் கதவிலக்க எண்.5, சேஷையா சாஸ்திரி ரோடு, ராஜகோபாலபுரம், புதுக்கோட்டையில் உள்ள வீட்டை நந்தகுமாருக்கு கிரையம் செய்த விபரமும், பின்னிட்டு வங்கி மேற்படி சொத்தை எடுத்துக்கொண்ட விபரமும் தெரிய வந்தது.

29) 2022ம் வருடம்தான் வங்கியில் அந்த வீட்டை ஒப்படைத்தோம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.